மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
03.11.2022 வியாழக்கிழமை
supeedsam.com
supeedsam@gmail.com

# முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படவில்லை

## சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு ஜனாதிபதி எழுத்து மூலம் அறிவிப்பு

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் நாட்டில் நீண்டகால முறைமை மாற்றங்களை (**Far Reaching Systematic Changes**) ஏற்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு ஜனாதிபதி எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இந்த முன்மொழிவுகளில், தேசிய சபையை ஸ்தாபிக்கும் நடவடிக்கை மாத்திரமே இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி இன்று (03) அனுப்பியுள்ள இந்த எழுத்துமூல அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்ட யோசனைகளில் வங்கி விவகார மற்றும் நிதிச் சேவைகள் தொடர்பான குழு (**Committee on Banking and**

02

## பொருட்களின் விலை குறைப்பு

சதொசவில் சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைப்பட்டுள்ளன. ஒரு கிலோ கிராம் சீனி 22 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் கோதுமை மா 96 ரூபாவினாலும், உள்ளூர் டின் மீன் 105 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் நெத்தலி மற்றும் கருவாடு 200 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் பருப்பு 17 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன.

## நவம்பர் 8இல் முழு சந்திர கிரகணம்

எதிர்வரும் 8ஆம் திகதி முழு சந்திர கிரகணம் நிகழவுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் பிரிவின் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார். இந்த சந்திர கிரகணம் அதிகபட்சமாக மாலை 4.29 மணிக்கும், முடிவடைவது இரவு 7.26 மணிக்கும் இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மாலை 5.48 மணிக்கு கிழக்கு அடிவானத்தில் இருந்து சந்திரன் உதயமாகவுள்ள நிலையில், அதன் கடைசி பகுதியை மட்டுமே பகுதி கிரகணமாக இலங்கையர்கள் காண முடியும் எனவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் விலையில் திருத்தமில்லை

இந்த வாரம் எரிபொருள் விலை திருத்தப்படாது என தெரிவித்துள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நுகர்வோரின் தேவைகளுக்கு ஏற்ப எரிபொருளை ஓர்டர் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அவர் தனது ட்விட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார். விலை குறைப்பை எதிர்பார்த்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் ஓர்டர்களை வழங்காததால் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வெறுமையாக காட்சியளிப்பதாகவும் தெரிவித்தார்.

## சீன போர்க்கப்பல்களுக்கு நடுக்கடலில் எரிபொருள் நிரப்புவதை நிறுத்தவும் இலங்கையிடம் இந்தியா வலியுறுத்து

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து சீனாவின் போர்க்கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்ப இலங்கை அனுமதித்தமைக்கு இந்தியா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாக பல ஆதாரங்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை துறைமுகமானது சீன போர்க்கப்பல்களுக்கு இந்தியா அல்லது அமெரிக்க தலையீடு இல்லாமல் எரிபொருள் நிரப்புவதற்கு சரியான தீர்வை வழங்குகிறது என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் இலங்கை கவனத்தில்கொள்ளுமாறு இந்திய அதிகாரிகள் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

02

## கல்முனை விவகாரத்தில் விட்டுக்கொடுப்பு இல்லையேல் இனப்பிரச்சினை தீர்வில் ஒன்றித்து பயணிக்க முடியாது



### -எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி.தெரிவிப்பு

கல்முனை விவகாரத்தில் விட்டுக்கொடுப்பு செய்வதற்கு தமிழ் தரப்பு முன்வரா விட்டால் இனப்பிரச்சினை தீர்வு மற்றும் அதிகாரப்பகிர்வு விடயத்தில் முஸ்லிம் சமூகம் பரஸ்பரம் புரிந்துணர்வோடு ஒன்றித்து பயணிக்க முடியாத துர்ப்பாக்கியம் ஏற்படலாம் என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார். சமகால அரசியல்

02

## போராட்டங்களை நடத்த முடியாது என்ற கருத்தை மாற்றியமைக்க முடிந்துள்ளது



அரசாங்கத்தின் அனுமதியின்றி அல்லது பொலிஸாரின் அனுமதியின்றி பேரணிகள் மற்றும் போராட்டங்களை நடத்த முடியாது என்ற கருத்தை முற்றாக மாற்றியமைக்க நேற்றைய போராட்டத்தின் மூலம் முடிந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். நாட்டின் உயிர் நாடியாக கருதப்படும் சிறுவர் தலைமுறையை

02

## "விட்டுக்கொடுப்பு" என்னும் சொல் கடந்த காலத்தோடு காலாவதியாகிவிட்டது

### த.அ.கட்சி வாலிப முன்னணி துணைச்செயலாளர் அ.நிதான்சன்

(வி.ரி. சகாதேவராஜா)



விட்டுக்கொடுப்பு" என்னும் சொல் கடந்த காலத்தோடு காலாவதியாகிவிட்டது எமக்கு தேவையானதை நாம் பெற்றுக் கொள்வோம் ஹரீஸ் கருத்துக்கு தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணி துணைச்செயலாளர் அ.நிதான்சன் பதிலடி கொடுத்தார். அவர் மேலும் கூறுகையில், கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் "விட்டுக்கொடுப்பு" என்னும் சொல் காலவதியாகிவிட்டது. 33 வருடமாக விட்டுக்கொடுப்பு என்னும் சொல்லில் இனவாத குளிர்காய்ந்தவர்கள் அரசியல் சுகம் அனுபவித்து விட்டார்கள். எவ்வித விட்டுகொடுப்புக்களும் இன்றி வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைகள் உள்ளடக்கிய பிரதேச செயலக நிர்வாக ரீதியாக இயங்குவதில் போடப்படும் முட்டுக்கட்டைகளை இடுபவர்களுக்கு

02






## சுற்றுலா விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடு செல்ல வேண்டாம்

### மக்களுக்கு எச்சரிக்கை

சுற்றுலா விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டாம் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுக்கு சுற்றுலா விசா மூலம் சென்றவர்களில் சிலர் தொழிலின்றி நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதாக அந்தப் பணியகத்தின பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.

02




## கல்முனை விவகாரத்தில் விட்டுப்பு இல்லையேல்

விடயங்கள் குறித்து அண்மையில் கல்முனையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் உட்பட மாநகர சபை உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்த இந்நிகழ்வில் ஹரீஸ் எம்.பி. மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டில் மத்திய அரசுடன் முழுமையாக இருந்து நிர்வாகம் செய்ய முடியாது என்பதற்காகவே 1948ஆம் ஆண்டு தொடக்கம் சமஷ்டி தீர்வின் அடிப்படையிலான அதிகாரப்பகிர்வின் ஊடாக வடக்கு, கிழக்கில் ஒரு தனியான நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என தமிழ் சமூகம் கோரி வருகின்றது. அதற்காக பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அதில் நியாயமும் இருந்தது. அதனால்தான் எமது பெரும் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், முன்னாள் செனட்டர் மசூர் மௌலானா போன்றோர் தமிழ் தலைமைகளுடன் இணைந்து அப்போராட்டங்களில் முக்கிய பங்காற்றியிருந்தனர். எங்களுடைய இப்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் கூட தமிழ் சமூகத்தின் அதிகாரப் பகிர்வுக்காக பாடுபடுகின்ற ஒருவராக இருக்கின்றார்.

இந்நிலையில்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் யாழ்ப்பாணத்தில் ஒரு கொள்கையுடனும் அம்பாறையில் இன்னொரு கொள்கையுடனும் செயற்படக்கூடாது என்று நான் வேண்டுகோள் விடுகின்றேன். மத்திய அரசின் கீழ் தமது நிர்வாகத்தை முழுமையாக செய்ய முடியாது என்பதற்காகவே மாகாண நிர்வாக அதிகாரத்தை கோருகின்ற தமிழ் தரப்பினர் அம்பாறை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 67 வீதமான தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் இங்கு மொழி ரீதியாக ஒரு கரையோர மாவட்டத்தை உருவாக்குவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றபோது, அதற்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு, அவ்வாறான ஒரு மாவட்டம் உருவாகி விடக்கூடாது என்ற அடிப்படையில் உள்ளக அரசியலை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக கல்முனை விவகாரத்திலும் கூட தமிழ் பேசும் முஸ்லிம்களுடன் இணைந்து நிர்வாகம் செய்ய முடியாது எனக்கூறுகின்ற தமிழ் தரப்பினர், அம்பாறை மாவட்ட நிர்வாகம் என்று வருகின்றபோது தமிழ் மொழி ரீதியிலான கரையோர மாவட்டத்தை மறுதலித்து சிங்கள மொழி ரீதியிலான நிர்வாகத்தினருடன் இணைந்து செயற்பட தயார் என்கின்றனர். ஒட்டு மொத்தமாக வடக்கு, கிழக்கு என்று வருகின்றபோது பெரும்பான்மையின ஆட்சியையும் சிங்கள மொழியையும் நிராகரித்து வருகின்ற நிலையில்தான் கல்முனை மற்றும் கரையோர மாவட்ட விவகாரங்களில் மாற்று நிலைப்பாட்டை எடுக்கின்றனர்.

இத்தகைய இரட்டை நிலைப்பாட்டைத்தான் தமிழ் கூட்டமைப்பு கைவிட வேண்டும் எனக் கோருகின்றேன். தலைவர் சம்மந்தன் ஐயா, சுமந்திரன் எம்.பி. மற்றும் தமிழ் எம்.பி.க்களிடம் இதனை மிகவும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகின்றோம். இவ்விடயம் கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் புத்திஜீவிகள் மற்றும் இளைஞர்களை சிந்திக்க வைக்கின்றது. இதுவொரு நியாயமற்ற போக்கு, மனச்சாட்சிக்கு விரோதமானது. தமிழருக்கான அதிகாரப்பகிர்வுத் தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்ற முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான நிலைப்பாட்டை தமிழ் அரசியல் தலைமைகள் கொண்டிருப்பதானது முஸ்லிம்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்த நிலை நீடிக்குமாயின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப்பகிர்வு விடயத்தில் தமிழ் சமூகத்துடன் முஸ்லிம் சமூகம் புரிந்துணர்வுடன் ஒன்றித்து பயணிக்க முடியாத துர்ப்பாக்கியம் ஏற்படலாம். குறிப்பாக கல்முனை விவகாரத்தில் விட்டுக்கொடுப்புடனான தீர்வுக்கு முன்வராமல் தமிழ் தரப்பு மறுக்கின்றபோது நிச்சயமாக தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் முஸ்லிம் சமூகம் வேறு திசைக்கு கொண்டு செல்லப்படலாம் என்ற செய்தியை சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

அதேவேளை கல்முனை செயலக விடயத்தில் நாங்கள் எதுவும் செய்யாமல் மௌனம் காத்து வருவதாக எமது முஸ்லிம் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆனால், நான் மற்றும் மேயர் உட்பட எல்லோரும் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எல்லா மட்டங்களிலும் செய்து கொண்டுதான் இருக்கின்றோம். அது தொடர்பிலான எல்லா விடயங்களையும் ஊடகங்களில் பறைசாற்றிக் கொண்டிருக்க முடியாது.

இந்த விவகாரத்தில் நாங்கள் பாரிய அழுத்தங்களுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களும் இந்த விடயத்தில் மிகவும் கரிசனையும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார். ஏனைய முஸ்லிம் எம்.பி.க்களுடனும் பேசியிருக்கின்றோம். அவர்களும் உரிய இடங்களில் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றனர்– என்று ஹரீஸ் எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ்.உமர் அலி, எம்.எம்.நிஸார், ஏ.எம்.சித்தி நஸ்ரின், முன்னாள் உறுப்பினர் ஷரீப் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் அவர்களின் இணைப்பு செயலாளர் நௌபர் ஏ.பாவா, கல்முனை 12ஆம் வட்டார மு.கா. வேட்பாளர் எம்.பளீல் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்

## சீன போர்க்கப்பல்களுக்கு நடுக்கடலில் எரிபொருள் நிரப்புவதை நிறுத்தவும்

கண்காணிப்பைத் தவிர்ப்பதற்காக சீனப் போர்க்கப்பல்கள் துறைமுகத்தைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று இந்தியாவுடன் அமெரிக்காவும் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்படுத்த சீனாவின் உதவி தேவைப்படுவதால், இலங்கை ஒரு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளமையும் இதற்கு காரணமாக அமைந்ததாக அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சுற்றுலா விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடு செல்ல வேண்டாம்

எனவே, சுற்றுலா விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ள நபர்களை பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.




## "விட்டுக்கொடுப்பு" என்னும் சொல் கடந்த காலத்தோடு காலாவதியாகிவிட்டது

இனிவரும் காலங்கள் கடினமானதாக அமையும்.1993ஆண்டுமுதல்முழுமையான அதிகாரத்துடன் இயங்க வேண்டிய நிர்வாக அலகினை இயங்கவிடாது தடுத்துவரும் இனவாதிகளுக்கு தக்கபதிலடி விரைவில் வழங்கப்படும்.மேலும் வடகிழக்கு இணைப்புக்கு ஒத்துவராத இனவாத முஸ்லிம் தலைவர்கள் இருக்கும் மட்டும் கல்முனை கரையோர மாவட்டமும் கனவாகவே செல்லும்.மேலும் கல்முனை 95சூதமிழர்களை கொண்ட நகரம். அங்கு சட்டவிரோத ரீதியாக உருவாக்கப்பட்ட முஸ்லிம் கொலனி(இஸ்லாமபாத்) இன்று இனரீதியான பெயரில் இயங்குகின்றது. இதனை ஒரு போதும் ஏற்க முடியாது. .கல்முனைக்குடி கல்முனையாக மாற்றப்பட்டு ஆக்கிரமிப்பு,திட்டமிட்ட அரச காணிகள் கபளீகரம் செய்யப்படுகின்றமை, நாளுக்கு நாள் நிர்வாக எல்லையினுள் மாற்றங்கள் ,எவ்வித அரச அனுமதியும் இன்றி சட்டவிரோதமாக மாற்றப்படுகின்றமை போன்ற செயல்களை நிறுத்தாத வரைக்கும் விட்டுக்கொடுப்பு எனும் பதம் யாரும் பயன்படுத்தி பலன் இல்லை.

தமிழ்,சிங்கள,முஸ்லிம் மக்களை உள்ளடக்கி நிர்வாகம் செய்யும் வடக்கு பிரதேச செயலகத்தின் செயல்பாடுகளை நிர்வாக முடக்கத்தினை அரசோடு ஒட்டி உறவாடி செயல்படும் இயற்கை நீதிக்கு முரணான விடயங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

முஸ்லிம் மக்கள் மத்தியில் சென்று தமது வாக்குகளை கேட்க முடியாமல் இருக்கும் 20வது திருத்ததிற்கு கைகளை உயர்த்திய அரசியல்வாதிகள் இனவாத ரீதியாக அரசியல் தூபமிட்டு தமது பதவிகளை தக்க வைக்க எடுக்கும் ஆயுதமே வடக்கு பிரதேச செயலக விவகாரம் ஆகும். இந்த செயல்பாடுகள் இனிவரும் காலங்களில் சரிவராது என புரிந்து கொள்ள வேண்டும்.

அமைச்சரவை அனுமதி இருந்தும் அரச அதிகாரிகளின் தான்தோன்றித்தனமான செயல்பாடுகளும் கண்டிக்கத்தக்கது. கடந்த காலத்தில் கல்முனை காணி பதிவாளர் அலுவலகத்திலும் இவ்வாறான மீறல்கள் இடம்பெற்று இருப்பதை அறிய முடிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடகிழக்கு இணைப்போ அல்லது அதிகார பரவல் சமஷ்டி முறை கோருகின்றது.

தமிழ்பேசும் சமூகத்திற்காவே எனும்போது அதில் அரசியல் இலாபம் தேடுபவர்கள் தமது பதவிக்காக இன்று இனவாத அரசியல் தூபம் இடுகின்றனர்.

ஜனாசாக்கள் எரிக்கும் போது வாய்மூடி மௌனிகளாக இருந்து விட்டு ஆக்கிரமிப்பு விட்டுக் கொடுப்பு எனும் சொல் பதங்களை பாவித்து நிர்வாக முடக்கத்தின் ஊடாக முஸ்லிம் மக்களை காப்பதாக நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்.

இறந்தவரின் ஜனாசாக்களுக்காக குரல் கொடுக்காமல் இருந்து விட்டு முஸ்லிம் சமூகத்தை காக்கப் போகின்றோம் எனும் உசுப்பேற்றல் அரசியல் இனிவரும் காலத்தில் செல்லுபடியாகாது என்பதனை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## போராட்டங்களை நடத்த முடியாது என்ற கருத்தை மாற்றியமைக்க முடிந்துள்ளது

அறிவு,திறமை மற்றும் வசதிகளுடன் பூரணப்படுத்துவது தார்மீக பொறுப்பு என்று நம்பி அதற்கான நிலையான நோக்கை முன்நோக்காக கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் சக்வல (பிரபஞ்சம்) வேலைத்திட்டத்தின் கீழ் 39 ஆவது பாடசாலை பஸ் இன்று (03) கல்கமுவ யூ.பி.வன்னிநாயக்க தேசிய பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

போராட்டம் சட்டவிரோதமானது என பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அலுவலகத்திற்கும் பொலிஸார் தனிப்பட்ட முறையில் அறிவித்ததாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இந்த அறிவித்தலை தாம் உள்ளிட்ட எவரும் பொருட்டாக கொள்ளவில்லைஎன்றும்ஜனநாயகரீதியாக சுயமாக செல்வதற்கும்,போராட்டத்திற்கு செல்வதற்கும்,போராட்டம் நடத்துவதற்குமுள்ள அடிப்படை உரிமைகளை பாதுகாக்க முடிந்தமை நேற்று அடைந்த பாரிய வெற்றியாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சக்தி என்பது இந்நாட்டின் மாற்று அரசாங்கம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,தற்போது அது எதிர்க்கட்சியாக இருந்தாலும் பொறுப்புடன் நடந்து கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**Financial Services)**, பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான குழு **(Committee on Economic Stabilization)** மற்றும் வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு **(Committee on Ways and ஆநயளெ)** ஆகியவற்றை வங்கி விவகாரங்கள் தொடர்பில் நியமிப்பதற்கு முன்மொழியப்பட்டாலும் அவை இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி சபாநாயகருக்கு சுட்டிக்காட்டியுள்ளார். அத்தோடு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்கவும், பாராளுமன்ற வரவு–செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவவும் முன்மொழியப்பட்ட போதும் அவையும் செயற்படுத்தப்படவில்லை. இந்த பரிந்துரைகளின்படி 17 பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபிக்க வேண்டியுள்ள போதிலும் அவற்றுக்கான தலைவர்கள் இது வரை நியமிக்கப்படவில்லை எனவும் அவற்றுக்கு நியமிக்கப்படும் இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அளவுகோல் இன்னும் தயாரிக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அடுத்த வருட வரவு செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் இதனால் அரசாங்கம் எதிர்பார்க்கும் முறைமை மாற்றம் **(System Change)** மிக விரைவாக எட்டப்படும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார். பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்துக்கான சட்டமூலத்துக்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற்ற பின்னர் அதனை பாராளுமன்றத்தில் சமர்பிக்க உத்தேசித்துள்ளதாக



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**21276 | வே | 1993**
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**25090 | வே | 1990**
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

**21372 | வே | 1988**
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

**21297 | வே | 1987**
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 12

**25081 | பி | 1986**
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**20931 | வே | 1993**
சுந்தரமடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

**20733 | வி | 1992**
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**20538 | வே | 1989**
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சூ.செவ்: 08

**21102 | வே | 1987**
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**21321 | வே | 1993**
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சூ.செவ்: 09

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

**20706 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

**25102 | வே | 1989**
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சூ.செவ்: 03

**20850 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

**21324 | வே | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

**21033 | கோ | 1992**
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

**20874 | வே | 1994**
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சூ.செவ்: 10

**20619 | வே | 1991**
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

**21471 | வே | 1990**
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

**21333 | வே | 1985**
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

**20694 | வே | 1995**
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**20883 | வே | 1993**
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

**21444 | வே | 1991**
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

**21105 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சூ.செவ்: 07

**21300 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சூ.செவ்: 10

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சூ.செவ்: 06

**21132 | கோ | 1994**
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

**23749 | வே | 1993**
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ்: 06

**23821 | வே | 1998**
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

**20853 | கோ | 1999**
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

## அருந்ததி பிரைவட் லிமிட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்

# ANGEL BEAUTI CARE MITHUJAN SUMITHA

# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி











Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023

**08th of January 2023**
**Contact 076 9759197**
**At BMICH MAIN HALL**

# இலுக்கு கிராமத்தில் வீடு கையளிப்பு



இலண்டனை தளமயக கொண்டு இயங்கும் லண்டன் ஈலப்பதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் அனுசரனையில் லண்டனில் வசித்து வரும் யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதி மாத்திரை கோயில் அடியைச் சேர்ந்தவர்களான இவர்கள் காலஞ்சென்ற பொன்னையா மார்கண்டு அவரது துணைவியாரான காலம் சென்ற லீலாவதி மார்க்கண்டு ஞாபகார்த்தமாக பிள்ளைகள் பேரப்பிள்ளைகளின் உதவியுடன் மனோகரா தேவி கோனேஸ்வரன் மார்க்கண்டு மனோரதன் மஞ்சுளாவதி நயதேவன் மார்க்கண்டு மனோ ரஜன் ஆகியோர் அவர்களது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளின் உதவியோடு இவர்களுக்கான வீட்டின் நிர்மாணித்து சகல வசதிகளுடன் இந்த வீட்டினை கையளித்திருக்கிறார்கள் மின்சார வசதி மற்றும் தளபாடங்கள் என சகல விதமான வசதிகளுடனும் இந்த வீட்டினை கட்டி கொடுத்து இருப்பது குறிப்பிடத்தக்கது

நிதியுதவியின் மூலம் 20.00000 பெறுமதியிலான வாழ்வாதார உதவித்திட்டமானது மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச செளலாளர் பிரிவிற்க்கு உட்பட்ட ஈரளக்குளம் கிராம சேவகர்ப் பிரிவில் இலுக்கு கிராமத்தில் 17 வருடங்களாக கணவன் கானாமலாக்கப்பட்ட நிலையில மிகவும் வாழ்வாதாரத்திற்காக துன்பப்பட்டு யோகராஜா வள்ளி என்ற குடும்பம் ஒன்றுக்கே இந்த உதவித்திட்டம் மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச செளலாளர் பிரிவிற்க்கு உட்பட்ட பலாச்சோலையில் வழங்கி வைக்கப்பட்டது

இவ் நிகழ்வானது இன்று நடைபெற்றது இதில் பிரதம அதிதிகளாகக் முன்னாள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் மற்றும் ஏ10றாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச சபை தவிசாளர் சர்வானந்தன் கலந்து கொண்டு வீட்டினை வீட்டு உரிமையாளரிடம் கையழித்தனர் அத்தோடு சிறப்பு அதிதியாக கலந்து கொண்டிருந்த ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச சபை உறுப்பினரான வே.வேல்பரமதேவா நிகழ்வில் லண்டனை ஈலப்பதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் உதவித்திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்கலான லோகநாதன் அனோஜன்இ நாகராஜா ஆனந்தராஜா இருவரும் பலாச்சோலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொது மக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது

# நுவரெலியா அட்டன் வீதியில் மண்சரிவு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக நுவரெலியா அட்டன் A7 பிரதான வீதியில் நேற்று மாலை (02) மண்சரிவு ஏற்பட்டுள்ளது. குறித்த மண்சரிவு நானுஓயா டெஸ்போர்ட் வழியாக மெராயா செல்லும் பகுதியில் ஏற்பட்டுள்ளது. மேலும் இப்பாதையின் நடுவே பாறைகள் மற்றும் மண் மேடுகள் சரிந்து வீழ்ந்தமையால் அவ்வழி போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நுவரெலியா, தலவாக்கலை மற்றும் மெராயா வழியூடாக டயகமைக்கான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது . தற்போது இவ்வீதியில் ஒரு மறுங்கில் மாத்திரம் போக்குவரத்து இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் அவ் வழியாக செல்லும் வாகன சாரதிகள் பெறும் அசௌகரியத்தை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர்.

# மூங்கிலாறு வசமாகின்ற பூச்சிக்கூடு கிராம வீதி



**இ.சுதாகரன்**

வெல்லாவெளி போரதீவுப்பற்று பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட எல்லைக்கிராமமான பூச்சிக்கூடு கிராமத்திற்கு செல்லும் பிரதான பாதையானது மூங்கிலாற்றின் பெருக்கம் காரணமாக அரிப்பு ஏற்பட்டு தற்போது முழுமையாக சேதம் ஏற்படக் கூடியதாக உள்ளதாக பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதன் காரணமாக அதிகளவான நெற்செய்கைக் காணிகள் சேதமடைவதற்கான வாய்ப்புகள் தென்படுவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.இது தொடர்பாக பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இது தொடர்பாக எதுவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது பருவ கால மழை ஆரம்பித்துள்ள நிலையில் மூங்கிலாறு குறித்த வீதியினை முழுமையாக அரிப்பெடுக்கும் வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் இது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டுமென பொது அமைப்புக்கள் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.

# அரசியல் தொழில் அபாயகரமானது

## கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் சுபைர்

மிகவும் ஆபத்தானதாகவே தான் இந்த அரசியல் அரசியல் தொழிலை பார்ப்பதாக கிழக்கு மகாகாண முன்னளர் பிரதித் தவிசாளரும் கிழக்கு மாகாண முன்னால், சுகாதார அமைச்சரும் தற்போதைய ஏறாவூர் நகர சபையின் உறுப்பினருமான எம்.எஸ். சுபைர் தெரிவித்தார். அகால மரணமடைந்த ஏறாவூர் நகர சபையின் உப தவிசாளரான அப்துல்சாலி முஹம்மத் றியாழின் அனுதாபப் பிரேரணை மீது உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.




ஏறாவூர் நகர சபையின் மாதாந்த அமர்வும் திடீர் மரணமடைந்த ஏறாவூர் நகர சபையின் உப தவிசாளரான அப்துல்சாலி முஹம்மத் றியாழுக்கான அனுதாபப் பிரேரணை நிறைவேற்றலும் வியாழக்கிழமை (03) எறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ். நழிம் தலைமையில் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய சுபைர், குறிப்பாக அரசியல்வாதிகள் மக்கள் மத்தியிலே அரசியல் கடமைகளிலே ஈடுபடுகின்றபோது அங்கிருக்கின்றபலநூற்றுக்கணக்கானமக்கள்தமது பல்வேறு குறைபாடுகளையும் தேவைகளையும் பிரச்சினைகளையும் சொல்வார்கள். எனவே தங்களது குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

அவ்வாறு மக்களின் குறைகள் தீர்க்கப்படாதபட்சத்தில் அரசியல்வாதிகளை மக்கள் கடிந்து கொள்கின்றார்கள். அதேபோன்று நாம் அரசியல் செய்கின்றபோது சிலர் எங்களை ஊழல் வாதிகளாகப் பார்க்கின்றார்கள்.

சிலர் அரசியல்வாதிகளை ஊழல்வாதிகளாக மாற்றுவதற்கு முயற்சிக்கின்றார்கள். இப்படிப் பல சவால்களை மக்கள் மத்தியிலே இருக்கின்ற அரசியல்வாதிகள் எதிர்கொள்ளும் சூழ்நிலை காணப்படுகின்றது. அதனால்தான் அரசியலை ஒரு ஆபத்தான தொழில் என்று நான் குறிப்பிடுகின்றேன்." என்றார்.

இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு ஏறாவூர் நகர சபையின் உறுப்பினராகத் தெரிவாகி பின்னர் இவ்வருடம் ஏப்ரில் மாதம் 28ஆம் திகதி ஏறாவூர் நகர சபையின் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டு கடந்த 26.10.2022 அன்று அகால மரணமடைந்த றியாழ் (வயது 42) மீதான அனுதாபப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# சமுத்திர தீர்த்தம்



வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாள் சமுத்திர தீர்த்தம் பிரதமகுரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெற்ற போது. படங்கள் காரைதீவு சகா

# நித்தியானந்தா சிவசுப்பிரமணிய ஆலயத்தில் திருக்கலியாணத்திருவிழா



**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு செட்டிபாளையம் அருள்மிகு ஸ்ரீ நித்தியானந்தா சிவசுப்பிரமணிய ஆலயத்தில் கந்த சஷ்ட்டி விரதத்தின் இறுதிநாளான திங்கட்கிழமை(31) திருக்கலியாணத்திருவிழா மற்றும் ஊர்வலம் இடம்பெற்றது. முருகனுக்கான திருக்கலியாணக்கோலம், பெண் பார்க்க செல்லுதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. சுவாமி ஊர்வலமாக செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலயம், சித்தி விநாயகர் ஆலயம், மாங்காடு கட்டுப்பிள்ளையார் ஆலயத்திற்கும் சென்று கிராம மக்களுக்கு அருள்பாலித்தார். திருவிழா ஆலயப்பிரதம குரு நா.குணகேந்திர குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெற்றன.



நிறைதமிழ் அகணி சுரேசின் ஏற்பாட்டில் சுவிஸ்தமிழ் இலக்கிய சங்கத்தின் தலைவர் கலாநிதி கல்லாறு சதீஷ், சூரீச் கணிதநெறி கற்கைமைய ஆசிரியர் செல்வி வித்யா மகேந்திரன் ஆகியோரது சேவைகளைபாராட்டி சுவிஸ் சூரீச் நகரில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம்



# கையை தூக்கி விட்டு காலில் விழுபவர்கள் நாங்கள் அல்ல

## பாராட்டு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் காட்டம்

(காரைதீவு சகா)

வருகின்ற அரசாங்கங்களுக்கு கையை உயர்த்திவிட்டு பின்னர் காலில் விழுந்து சலுகைகள் கேட்பவர்கள் நாங்கள் அல்ல.இரட்டை வேடம் போடுபவர்கள் நாங்கள் அல்ல. என்றும் நாங்கள் துணிகரமாக உண்மைக்காக நியாயத்திற்காக உரிமைக்காக தொடர்ச்சியாக ஒரே கொள்கையில் பயணிப்பவர்கள் . நாம் ஒரு போதும் சலுகைக்காக சோரம் போனவர்களல்ல. இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் காட்டமாக கூறினார்.

சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் மகா வித்தியாலய அதிபர் அருட்சகோதரி சிறியபுஷ்பம், தேசிய விருதான குரு பிரதீபா பிரபா பெற்றதை கௌரவிக்கு முகமாக இடம்பெற்ற விழாவில் பிரதமஅதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சொறிக்கல்முனை கல்வி சமூகம் அங்கு சாதனை படைத்த அதிபர் மற்றும் மாணவர்களுக்கு விரிவான பாராட்டு விழா ஒன்றை செவ்வாய்க்கிழமை நடத்தியது .

சொறிக்கல்முனை சமூகநல மேம்பாட்டு அமைப்பினரும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் இணைந்து இந்த பாராட்டு விழாவை நடத்தியது. பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன் கலந்து சிறப்பிக்க, சிறப்பதிகளாக சம்மாந்துறை வலய பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்ஷினி மகேந்திர குமார் ,உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, சொறிக்கல்முனை வைத்திய சாலை வைத்திய அதிகாரி டாக்டர் கே.எம்.ஏ.ஷாலினி மற்றும் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் அ.சுதர்சன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

விருது பெற்ற அருட் சகோதரி சிறியபுஷ்பம் அவர்களின் தாயாரும் கலந்து சிறப்பித்தார். இவ்வாண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சிறந்த அதிபருக்கான குரு பிரதீபா பிரபா சிறந்த அதிபர் விருது பெற்ற ஹொலிகுறோஸ் மகா வித்தியாலய அதிபர் அருட்சகோதரி சிறியபுஷ்பம் கல்வி சமூகத்தால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

அதேபோன்று கடந்த ஆண்டுகளில் சாதனை படைத்த மாணவர்களும் விருதுகள் பரிசுகள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். அங்கு அவர் மேலும் பேசுகையில்.... இலங்கையை பொறுத்த வரையிலே தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களை இணைத்து ஆளக்கூடிய அரசியல்வாதிகளை உருவாக்க வேண்டும். அப்பொழுது தான் இந்த பிரதேசம் மட்டுமல்ல நாடும் முன்னேற்றம் அடையும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தை முடக்கவேண்டும்என்பதற்காகபலகுழுக்களைஅமைத்து தமிழ் மக்களின் எதிர்காலத்தை குழி தோண்டி புதைக்க வேண்டும் என்ற வேலை திட்டத்தில் செயல்படுகிறார் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஹரிஸ் என்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள். இன்று அவர் ஒரு ஊடக அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். தமிழர்கள் இரட்டை வேடம் போடுபவர்கள் என்று.

நாங்கள் எந்த ஒரு கட்டத்திலும் இரட்டை வேடம் போடவும் இல்லை. போடப் போவதுமில்லை .அது உங்கள் தொழில் நீங்கள் தான் இரட்டை வேடம் போடுபவர்கள். இதனை முழு நாடும் அறியும். நாட்டிலேயே தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் செயல்படும் ஒரேயோரு கட்சி எமது தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டும் தான் என்பதை ஆணித்தரமாக கூறுவேன். வடக்கு கிழக்கு தாயகம் என்பது தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகம் என்பது நாங்கள்.



அன்று இருந்து இன்று வரை விட்டுக் கொடுத்து வந்தவர்கள் நாங்கள்தான்.எந்தகட்டத்திலும் முஸ்லிம் மக்களையும் இணைத்து தான் எமது பேச்சும் இருக்கும் செயலும் இருக்கும். ஆனால் இவர் போன்றவர்கள் இனவெறியை காட்டி அரசியல் குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதற்காக நாம் தொடர்ந்து விட்டுக்கொடுப்பை செய்து கொண்டிருப்போம் என்று எதிர்பார்க்க முடியாது. இதுவரைக்கும் நாட்டிலும் சரி, கல்முனை விவகாரத்திலும் சரி கூடுதலான விட்டுக் கொடுப்பை விட்டுக் கொடுத்து பொறுமையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றோம். பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதை அவர் அறிய வேண்டும்.

ஹரிஷ் போன்ற ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த இணைப்புகளையும் இந்த விடயங்களையும் விரும்பாமல் மதம் சார்ந்த ஒரு பிரதேசம் சார்ந்த அடிப்படையில் செயல்பட்டு வருகின்றார்கள். அது ஒரு வியாதி. அவர் அப்படி பேசினால் தான் முஸ்லிம் மக்கள் தனக்கு வாக்களிப்பார்கள் என நினைக்கின்றார். 69 லட்சம் வாக்குகள் பெற்று வந்தவரை அதே மக்கள் சேர்ந்து விரட்டியது வரலாறு. இதனை அவர் அடிக்கடி ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.

கல்முனை விவகாரத்தில் உரிய தருணம் வரும் போது அவருக்கு தக்க பாடத்தை புகட்டுவோம். ஹரீஷ் போன்றவர்களை முஸ்லிம் சகோதரர்கள் ஒதுக்க வேண்டும். ஒரு பிரதேச செயலாளர் இருக்கும் போது அவருக்கு தெரியாமல் அவரது பிரிவில் உள்ள கிராம சேவையாளர் பிரிவில் எல்லையை நிர்ணயிப்பதும் குளங்களை மண் போட்டுநிரப்புவதும் தமிழர்களின் பூர்வீக நிலங்களை கபளீகரம் செய்வதும் ஹரீஸின் வேலை.

நாங்கள் இன்று ஒன்று நாளை ஒன்று சொல்வதில்லை. ஹரீஷ் போன்றவர்கள் இருந்தால் இப்பகுதியில் இன நல்ல உறவு புரிந்துணர்வு என்பது எதிர்காலத்தில் கேள்விக்குறியாக இருக்கும். அவர் கூறிய இரட்டை வேடம் என்பது அவருக்குத் தான் பொருந்தும். கையை உயர்த்துவதும் காலில் விழுவதும் அதற்கு காரணமாக ஏதாவது சொல்வார்கள் . சலுகைகள் பெறவும், தமிழர்களை எதிர்க்கவும் என்று கூறுவார்.சில முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.பெரும்பாலானோர் நிராகரிக்கிறார்கள். நாம் எந்த சந்தர்ப்பத்திலும் எந்த இடத்திலும், யாருக்காகவும் சோரம் போகவும் இல்லை, போகப் போவதும் இல்லை . இதனை தெட்டத் தெளிவாக அவருக்கு கூறிவைக்க விரும்புகின்றேன். இதனை முழு உலகமும் அறியும். அவர், தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டு அம்மக்களின் வாழ்க்கையை குழி தோண்டி புதைக்கின்ற வேலையை செய்து வருகின்றார் என்பதை இந்த பிரதேசம் மட்டும் இல்ல பாராளுமன்றம் மாத்திரமல்ல முழு நாடுமே அறியும். ஹரீஷ் போன்றவர்களை விரட்டப்பட வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கை.

# பெண்களின் ஊதியமற்ற பராமரிப்பு பணியையும் உழைப்பையும் அங்கீகரியுங்கள்

ஒக்டோபர் மாதம் 20, 21 ஆம் திகதிகளில் மிக முக்கியமான கருத்தரங்கு ஒன்று கொழும்பில் இடம்பெற்றது. ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுப்பாலினர் கலந்துகொண்ட இவ்விருநாள் கருத்தரங்கு பெண்களின் ஊதியமற்ற பராமரிப்பு அத்துடன் தென்னாசியாவில் பெண்களின் உழைப்பு பற்றியதாக அமைந்திருந்தது. மேற்கூறியவற்றில் சமத்துவம் மற்றும் ஒப்புரவு பற்றிய அங்கீகாரம், அரச மட்டத்திலும் பொது மக்கள் சார்ந்தும் எவ்வாறு அங்கீகரிக்கப்பட வேண்டும் என இம் மகாநாடு ஆராய்ந்தது.

நீண்டகாலம் சர்வதேச ரீதியில் உரையாடப்பட்டு வருகின்ற பெண்களின் ஊதியமற்ற உழைப்பு, பராமரிப்பு வேலை பற்றி பெரிய அளவில் இலங்கையில் நடந்த முதலாவது மகாநாடு இது எனலாம். நேர்பங்குபற்றுதலுடனும் இணையவழி மூலம் நிகழ்நிலையாகவும் (200ஆ) நிகழ்ந்த இம் மகாநாட்டில் முதல் நாள் திறப்புரையை பேராசிரியர் தீபா சோப்ரா நிகழ்த்தினார். இரண்டாம் நாள் திறப்புரையை இலங்கைப் பாராளுமன்ற பிரதிநிதியான கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்கள் நிகழ்த்தினார். ஆர்ஜன்ரினா, பாகிஸ்தான், இந்தியா, இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்திய மலைநாடு எனப் பல்வேறு பெண்நிலைக் கல்வியாளர்களும் சமூக நிறுவனங்கள், பெண்கள் அமைப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்த பலரும் கருத்துரைகள் வழங்கியதுடன், கருத்துக்களும் தெரிவித்தனர். அவ்வகையில் இவ்விரு நாட்களும் மிகுந்த கரிசனையுடன் உணர்வுபூர்வமாக நிகழ்ந்த இம்மாநாடு இங்கையிலும் தென்னாசிய பிராந்தியத்திலும் பெண்களின் உழைப்பை அங்கிகரிப்பதன் முக்கியத்துவத்தை முன்னிறுத்தி நிகழ்ந்தது. மூன்று மொழிகளிலும் சமகால மொழிபெயர்ப்புகள் இடம்பெற்றமையால் மொழித்தடையின்றி விரும்பியோருக்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் வினா எழுப்பவோ கருத்துத் தெரிவிக்கவோ முடிந்தது.




இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த, பெண்களின் ஊதியமற்ற உழைப்பை அங்கீகாரம் செய்வது பற்றியச் சிந்தையைத் தூண்டுவதாகவும் நடைமுறை பூர்வமான கருத்துக்களை வெளிக்கொண்டுவருவதுமாகவும் அமைந்த இம்மகாநாட்டை பெண்கள் தொடர்பூடக கூட்டமைப்பினரும் இலங்கை சமூக விஞ்ஞானக் சங்கத்தினரும் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தனர் என்பது குறிப்பிடக் கூடியதாகும்.






# பல்கலைக்கழக மாணவிகளுக்கு நிதியுதவி



அபு அலா -

தந்தையிழந்து மிகவும் வறுமைக்கோட்டின்கீழ் கல்விகற்று யாழ். பல்கலைக்கழக கலைப்பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்ட முள்ளிவாய்கால் – உடையார்கட்டு பிரதேசத்தைச் இரு மாணவிகளின் உயர்படிப்பை கஷ்டமின்றி தொடர்வதற்கு இலங்கை காப்போம் தொண்டு நிறுவனம் நிதியுதவிகளை வழங்கி வைத்துள்ளது. இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் (திலீப்) உள்ளிட்ட குழுவினர் முள்ளிவாய்கால் – உடையார்கட்டு பிரதேசத்திலுள்ள சு . சங்கவி மற்றும் த. கிந்துஜா என்ற இரு மாணவிகளின் இல்லம்தேடிச் சென்று தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் முதற்கட்டமாக இந்த நிதியுதவிகளை வழங்கி வைத்துள்ளனர்.

இதன்போது யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பிரதி அதிபர் கு.சுதாகரன், வடகிழக்கு கலைப்பிரிவு மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர் த. யதுர்சனன் மற்றும் காப்போம் தொண்டு நிறுவனத்தின் உறுப்பினர் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

# பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கல்விச் சுற்றுலா



நூருல் /ஹதா உமர்

இறக்காமம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான கல்விச் சுற்றுலா முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். முஹம்மட் இம்டாடின் ஒருங்கிணைப்பில் பாலர் பாடசாலைகளில் கற்றல் வட்டங்களை நிறுவுதல் தொடர்பான விசேட களப் பயணமாக இக்கல்விச்சுற்றலா அமைந்திருந்ததுடன் நவீன கற்றல் கற்பித்தல் நுட்பங்களுடன் கூடிய பௌதீக அபிவிருத்தியினை கற்றல் வட்டங்களை நிறுவுவதன் மூலம் அடைந்து கொள்ளல் எனும் நோக்கோடு இக்கல்விச்சுற்றுலா அமைந்திருந்தது.

இறக்காமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி அஹமட் நஸீல் தலைமையில் இடம் பெற்ற இக்கல்விச் சுற்றுலாவில் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் – அம்பாரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.எம்.ஏ.பி.எஸ். விஜேரத்ன, இறக்காமம் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எச்.வஹாப், ஆலயடி வேம்பு பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ். கரீமா, அம்பாரை பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தனுஜா, மற்றும் பாலர் பாடசாலை ஆசிரியைகளும் கலந்து கொண்டனர்.

# சிறுவர் , முதியோர் தின கலை விழா



கோறளைப்பற்று, வடக்கு வாகரை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜ் ஏற்பாட்டில் பிரதேச சிறுவர் சபை தலைவர் சேகர் தனுஷ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வாகரை பிரதேச செயலாளர் எந்திரி.க. அருணன் கௌரவ அதிதிகளாக உதவிப் பிரதேச செயலாளர் கு.பிரணவன்
கணக்காளர் ச. ஜெயேந்ரா , கல்குடா வலய கல்வி முறைசாரகல்வி இணைப்பாளர் என். சதர்த்தனன் மற்றும் பாடசாலை அதிபர்கள் . வேள்ட்விஷன், அகம் , எஸ்கோ பிரதிநிதிகள் , பாடசாலை ஆசிரியர்கள் , வேள்ட்விஷன் ,கிராம அபிவிருத்தசங்க உறுப்பினர்கள், சிறுவர் கழக தொண்டர்கள் , பொதுமக்கள் ,350 சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வுகளாக முதியோர் , சிறுவர் கலைநிகழ்வுகள் , வெற்றியீட்டிய சிறுவர்களுக்கான பரிசில்கள் , மற்றும் முதியோர் கௌரவிப்பு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது .

# மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் செயற்திட்டம்



(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் செயற்திட்டத்தை காரைதீவு பிரதேச சபை முன்னெடுத்து வருகின்றது. இது தொடர்பான உயர் மட்ட கலந்துரையாடல் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இக் கூட்டமானது **UNDP** நிறுவனத்தின் அனுசரணையில் அந்த நிறுவனத்தின் அதிகாரிகள்,பிரதேச சபை செயலாளர், உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர், காரைதீவு பிரதேசத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் சங்க தலைவர், செயலாளர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். இக் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்காக எதிர்காலத்தில் இவர்களிற்கான வாழ்வாதார உதவிகள், சுய தொழில் செய்வதற்கான உதவிகள் மற்றும் அவர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளிற்கும் உதவி வழங்குவதாகவும் அவர்களிற்கு தேவையான ஊன்றுகோல், **wheel chair** என்பனவற்றினை முன்னய காலங்களில் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம். இனிவரும் காலங்களிலும் **UNDP** மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொடுக்க முயற்சி மேற்கொள்வதாகவும் தவிசாளர் உறுதியளித்தார் .

இதனை **UNDP** அதிகாரிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளும் காரைதீவு பிரதேச சபையின் இச் செயற்பாடுகளை பாராட்டினார்கள்

நாள்தோறும் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையை பார்வையிட
www.supeedsam.com

# கல்முனை சந்தான்கேணியில் தனியார் ஆக்கிரமிப்பை தடுக்க அவசர நடவடிக்கை



(செயிட் ஆஷிப்)

கல்முனை சந்தான்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானக் காணியில் தனி நபர்களினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற நிலப் பகுதிகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான விசேட ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை (03) கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் இடம்பெற்றது.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி றொஷான் அக்தர், எம்.எஸ்.எம்.நிஸார், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஹலீம் ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கல்முனை சந்தான்கேணி விளையாட்டு மைதான எல்லைகளில் இடம்பெறும் அத்துமீறல்கள், அனுமதியற்ற கட்டுமானங்கள் மற்றும் சட்டவிரோத குடியேற்றங்கள் போன்ற விடயங்களை தடுத்து நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய துரித நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இம்மைதானக் காணியின் எல்லைப்பகுதிகளில் கடந்த 25 வருடங்களுக்கு மேலான காலப் பகுதிகளில் தனி நபர்களின் அத்துமீறல்கள் காரணமாக அதன் பரப்பளவானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருப்பதாகவும் இயற்கையாகநீர்வடிந்தோடும்கால்வாய் கூட அடைக்கப்பட்டிருப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

காலாகாலமாக மிகவும் சூட்சகமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வந்துள்ள மைதானக் காணியின் எல்லைப் பகுதிகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை மிகவும் இறுக்கமாக முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் எல்லைப் பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்திருக்கின்ற நபர்களை விரைவாக கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்து, தேவையான அறிவுறுத்தல்களையும் உத்தரவுகளையும் வழங்குவதற்கும் இணக்கப்பாட்டுக்கு முன்வரத் தவறுகின்ற ஆக்கிரமிப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதில் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களும் விளையாட்டுத்துறை முக்கியஸ்தர்களுமான பெஸ்டர் றியாஸ், எம்.ஐ.எம்.அப்துல் மனாப் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு ஆலோசனைகளை முன்வைத்திருந்தனர்.

மைதான விடயத்தில் கரிசனையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற மாநகர முதல்வர் மற்றும் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் இந்நடவடிக்கைகளில் தளர்வுகள் ஏற்பட இடமளிக்காமல் உறுதியாக நின்று, எதிர்கால சந்ததியினருக்காக இம்மைதானத்தை பாதுகாத்துக் கொடுப்பதற்கு தொடர்ந்தும் முன்னிற்க வேண்டும் எனவும் இதன்போது பெஸ்டர் றியாஸ் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். இதற்காக விளையாட்டுக் கழகங்கள் அனைத்தும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவிருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து, விளையாட்டு மைதானத்திற்கு கள விஜயம் மேற்கொண்ட மாநகர முதல்வரும் அதிகாரிகளும் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் நிலைமைகளை ஆராய்ந்ததுடன் அவசரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கான அறிவுறுத்தல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாநகர முதல்வர் வழங்கியுள்ளார்.

# அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரிப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் கடந்த சில நாட்களாக நள்ளிரவு வேளைகளில் குடியிருப்பு பிரதேசங்களில் காட்டு யானைகள் புகுந்து வீட்டிலுள்ள பல மரங்களை நாசம் செய்து விட்டுச் சென்றுள்ளன. சுனாமி குடியிருப்பு பிரதேசமான சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் குடியிருப்பு வீட்டில் புகுந்து தென்னை மரங்கள், வாழை, பப்பாசி, தோடம் மரங்கள் போன்றவற்றை அழித்து விட்டுச் சென்றுள்ளன.

இவ்வாறு தினம் தினம் காட்டு யானைகள் ஊருக்குள் வந்து வீட்டு உடமைகளை நாசம் செய்வதால் அது ஊருக்குள் வராமலிருக்க சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக தகுந்த நடவடிக்கையை அவசரமாக எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாடசாலை மட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு அங்குரார்பணம்



இ.சுதாகரன்

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் திரு சித்திரவேல் சசிதரன் அவர்களின் தலையில் வியாழக்கிழமை(3) முற்பகல் 11மணியளவில் நடைபெற்றது. நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி அஜந்தா சத்தியசீலன் பிரதி அதிபர் த.சசிகாந்தன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன் போது சிறுவர் பாதுகாப்புக்குழு உருவாக்கப்பட்டதுடன் பாதுகாப்புக்குழு அமைப்பதன் நோக்கம் பாதுகாப்புக்குழு ஊடாக ஏனைய மாணவர்கள் அடைந்து கொள்ளக் கூடிய பயன்கள் , எதிர் காலத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.